மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

முன்னிலை : - **திருமதி.A. சீதாலெட்சுமி, M.A.,B.L.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், நீடாமங்கலம்

மாவட்ட உரிமையியல் நீதிபதி , மன்னார்குடி (முழு கூடுதல் பொறுப்பு)

2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 01 ஆம் நாள் புதன்கிழமை

திருவள்ளுவராண்டு 2054 ஸ்ரீ சோபகிருது வருடம் ஐப்பசித்திங்கள் 15 ஆம் நாள்

**இடைநிலை மனு எண். 112/2023-ல்**

**அசல் வழக்கு எண். 22/2017**

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், ஆவிக்கோட்டை கிராமத்தில் வசிக்கும், பெரமைய நாட்டார் மகன், இந்து, 52 வயதுள்ள ஞானசம்பந்தம்.

...மனுதாரர்/வாதி

// **எதிர்**//

1. மன்னார்குடி டி.மு.இலாகா மற்றும் தாலுக்கா, மேலநத்தம் கிராமத்தில் வசிக்கும் கோவிந்தசாமி கண்டியர் மகன், இந்து, 65 வயதுள்ள புண்ணியமூர்த்தி.
2. தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், கீழக்குறிச்சி கிராமம், மெயின்ரோட்டில் வசிக்கும் கோதண்டபாணி காளிங்கராயர் மகன், இந்து, 60 வயதுள்ள ஜெயபால் .

...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது கடந்த 17.03.2023 ம் தேதி மனுதாரர்/வாதி முன்னிலையாகாததால் தள்ளுபடி செய்யப்பட்ட வழக்கை மீண்டும் கோப்பில் எடுத்து விசாரணைக்கு உத்தரவிடக்கோரி உ.ந.ச. கட்டளை 9 விதி 9-ன் கீழ் மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**இம்மனு தாக்கல் ஆன நாள்** :- 11.04.2023

**இம்மனு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள்** :- 17.04.2023

இம்மனுவின்மீது ரூ. 20/- நீதிமன்றக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

இம்மனு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. R. சம்பத்குமார் அவர்களும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. S. விஜயன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலணையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**<u>தீர்ப்பாணை உத்தரவு</u>**

மனுதாரர்/வாதி, எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு செலவுத் தொகையாக ரூ.1000/-ஐ செலுத்திவைக்க வேண்டும் மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

2023ம் ஆண்டு நவம்பர் மாதம் 01-ம் நாள் என்னுடைய கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டன.

(ஒம்/-A. சீதாலெட்சுமி),
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.(மு.கூ.பொ)